Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . .

# AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1 } சௌமியஹு ஐப்பசிமீ 1உ { Part. 7
புத்தகம். 1 } 1909ஹு அக்டோபர்மீ 17உ { பிரதி. 7

Contents

| | | |
|---|---|---|
| Soil deterioration due to exports | ... | 97 |
| Cattle ... | ... | 101 |
| Gardening ... | ... | 103 |
| Old sayings ... | ... | 105 |
| Month's operations | ... | 106 |
| Sivagiri Home Farm | ... | 107 |
| Books received ... | ... | 109 |
| The uses of the seed drill | ... | 110 |
| News and Notes ... | ... | 112 |

பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| ஏற்றுமதியால் நிலவளக் குறைவு | ... | 97 |
| கால்நடைகள் | ... | 101 |
| தோட்டம்வைத்தல் | ... | 103 |
| பழமொழிகள் | ... | 105 |
| ஐப்பசிமாதப்பருவங்கள் | ... | 106 |
| சிவகிரி ஜமீன் சொந்தப் பண்ணை | ... | 107 |
| புத்தகவரவு | ... | 109 |
| விதைக்கலப்பையின் உபயோகம் | ... | 110 |
| சமாசாரக்குறிப்புகள் | ... | 112 |

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
**Annual Subscription including Postage As. 12 only**

**Edited and Published by**
**J. R. RANGA RAJU,**
**5, Mount Road, Madras**

[*All Rights reserved*]

# நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்கு பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்த தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதார்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதை கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை மாதத்து சஞ்சிகை (அதாவது முதல் பிரதி) செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு முதல்பிரதி கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்கவேண்டுமானால் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்

---

# கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. இப் பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரையமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

| சந்தா விபரம் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு ... ... | 0 | 12 | 0 |
| வி. பி. கமிஷன் அணா 1-பிரத்தியேகம். | | | |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0 | 2 | 0 |

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

**ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்**

5. மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| Vol. 1<br>புத்தகம் 1 | சௌமியஹு ஐப்பசிமீ 1உ<br>1909ஹு அக்டோபர்மீ 17உ | No. 7<br>பிரதி 7 |


## ஏற்றுமதியால் நிலவளக்குறைவு

## SOIL DETERIORATION DUE TO EXPORTS

நமது நிலங்களில் தற்காலத்தில் கிடைக்கும் மாகூல் முன்னிலும் குறைவு என்று நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். நமது நிலங்கள் வரவர வளத்தில் க்ஷீணமடைந்து வருகின்றனவென்றும், அதற்குக் காரணம் வருஷாவருஷம் மாகூல் ரூபமாக நாம் நிலங்களிலிருந்து எடுக்கும் வஸ்துக்களுக்குப் பதிலாக அவைகளுக்குச் சரிசமானமான வஸ்துக்களை எருரூபமாக நிலங்களில் போடாமலிருப்பதுதான் என்றும் தெரிவித்தோம். இதே பிரகாரமாக நிலங்களுக்கு சரியானபடி எருவிடாமல் தொடர்ந்து பல வருஷங்களுக்குப் பயிர் செய்துவந்தால் அந்நிலங்களிலிருந்து மாகூல் என்பதே கிடையாமல் போகுங்காலம் சீக்கிரத்தில் வந்துவிடும் என்பதாகவும் தெரிவித்தோம். இப்படி நிலங்கள் நாளுக்குநாள் க்ஷீணமடைந்துபோக நமது கிருஷிகர் அதற்குக் காரணமின்னதென்று கூர்ந்து கவனித்து சிரடையாமல் "நமக்கென்னவந்தது? ; நேற்று நடந்தபடி இன்றைக்கும் நடக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு சும்மாயிருக்கிறார்கள். ஒவ்வொரு கிருஷிகருக்கும் நாளுக்குநாள் குடும்பபாரமானது அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. முன் ஒரு வீட்டில், ஐந்துபேர்கள் இருந்தால், இப்போது அதேவீட்டில் குழந்தைகளும் குட்டிகளுமாக 15-பேர்களுக்குக்குறையாமல் இருக்கிறார்கள். [illegible] வேளைக்கு 1-படி அரிசி சமைத்தால் போதுமானதாயிருந்தவீட்

டில் இப்போது இரண்டரைப்படி சமையல்செய்தாலும் காணவில்லை. பள்ளிக்கூடச்சம்பளம் வரவர அதிகப்படுத்திவிட்டார்கள். மற்றசெல வுகளும் இப்போது அதிகமாய்விட்டன. அனேக இடங்களில் முனிசி பல் தீர்வை முதலான அனேக தீர்வைகள் புதிதாய்க் கொடுக்க வேண்டியதாய் நேரிட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இருப்பதால் நிலத்தின் விளைவை ஒவ்வொரு கிருஷிகரும் தம்மால் கூடிய அள வுக்கு அதிகப்படுத்தவேண்டியது அவசியம்.

"நிலத்தில் உண்டான பூண்டு நிலத்திலேயே மடியவேண்டும்" என்னும் பழமொழியை நமது முன்னோர்கள் ஏற்படுத்தியதின் கார ணம் என்னவெனில், நிலத்திலிருந்து என்ன மாசூல் எடுத்தாலும் அதற்குச் சரிசமானமான எருவை அந்த நிலத்துக்கிடவேண்டும் என்று காட்டுவதற்காகத்தான். கிருஷிகருக்குள்ள சொத்தெல் லாம் அவர்களுடைய நிலங்களும் கால் நடைகளுந்தான். அந்த நிலங்களுக்கு ஏற்படும் விலை மதிப்பு அவைகளின் மாசூல் அளவுக் குத் தக்கதாகவே இருக்கும். நிலங்களின் வளம் குறையக் குறைய அவைகளின் விலை மதிப்பும் விசேஷமாய்க் குறைவுபடும். அப்படி குறைந்தால் கிருஷிகரின் சொத்தும் குறைகிறதல்லவா? இவ்வித மாக நாமெல்லாம் நாளாவட்டத்தில் அதிக ஏழைகளாய் விடுவோம்.

நமது தேசத்திலிருந்து அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் விளைபொருட்கள் எல்லாம் நமது தேசத்திலுள்ள நிலங்களின் பயிரு ணவை நஷ்டப்படுத்துகின்றன. சென்னையில் விளையும் தானியங்களை பம்பாயிலிருக்கும் ஜனங்கள் வாங்கிச் சாப்பிட்டால், அந்த இராஜதா னியில் அவை உபயோகமடைந்து, அந்த ஜனங்களின் மலமூத்திரங் கள் எந்த நிலத்தையடைகின்றனவோ அந்த நிலத்தை விர்த்தி செ ய்கின்றன. சென்னை இராஜதானிக்கு அம்மட்டிலும் நஷ்டந்தான். என்றாலும் பம்பாய் இராஜதானியாவது அதனால் அனுகூலப்பட்டது என்று வைத்துக்கொள்ளலாம். அப்படியில்லாமல், அயல் நாடுகளு க்கு அந்த விளைபொருட்கள் போய்விடுமேயானால், இந்தத் தேசத் துக்கே அதனால் நஷ்டமுண்டாயிற்றென்று தீர்மானமாய்ச் சொல்ல வேண்டும். சென்னை இராஜதானியில் தற்காலத்தில் இவ்வகையான நஷ்டம் வருஷாவருஷம் உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. செ ன்ற வருஷத்தில் நமது இராஜதானியிலிருந்து அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் கணக்கைப் பார்க்கும்போது நமது வயிறு பற்றியெரிகின்றது. ஆகார தானியங்களைத் தவிரத் தைலவி த்துக்கள்மட்டும் அவ்வருஷத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடியே எழு பது இலக்ஷரூபாய் பெறுமானது அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியா யின. தைலவித்துக்களின் புண்ணாக்குகள் மட்டும் சுமார் 55-இலக்ஷம் ரூபாய் பெறுமானது ஏற்றுமதியாயிற்று. ஜப்பான் தேசத்துக்கு மட்டும் கடல் மீன் இந்த தேசத்திலிருந்து சுமார் $7\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் விலையுள்ளது ஏற்றுமதியாயிருக்கிறது. சுமார் $4\frac{1}{2}$-இலக்ஷம் ரூபாய்

பெறுமான எலும்புகள் அயல் தேசங்களுக்கு அனுப்பப்பட்டன. இப்படி வருஷாவருஷம் அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் மற்றவிளைபொருட்களின் அளவும் அதிகமாகவே இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இவ்விதமாக இரண்டு மூன்று கோடி ரூபாய் பெறுமான வஸ்துக்கள் ஏற்றுமதியானால், நமது நிலங்களின் விலைமதிப்பும் வளமும் அவ்வளவு ரூபாய்க்கு குறைந்ததாகவே நாம் எண்ணவேண்டும். நமது கிருஷிகருக்கு நாம் சொல்லுங் காரியங்கள் எல்லாம் எளிதில் விளங்குவதில்லை. கண்ணினால் காணக்கூடாத அதிக நுட்பமான விஷயங்கள் ஒன்றையும் யூகித்து அறியும்படி நாம் அவர்களுக்குச் சொல்லவில்லை. இவ்வளவு கோடி ரூபாய் விலையுள்ள விளைபொருட்கள் நமது தேசத்திலிருந்து ஒவ்வொரு வருஷமும் அயல் தேசங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றவென்பது கணக்குகளால் நாமெல்லாரும் நன்றாய்த் தெரிந்துகொள்ளக்கூடிய காரியம். இதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதை முதல் முதல் மனதில் பதித்துக்கொண்டால், அப்படி விளைபொருட்கள் ஏற்றுமதியாவதால் நமது நிலங்களுக்கு நஷ்டமுண்டாகிறது என்னும் விஷயம் சரியா அல்லவா வென்பதைக் கவனிக்கலாம். ஒரு நிலத்திலிட்ட பயிரானது வளரும்போது அந்த நிலத்திலுள்ள தாதுப்பொருள்களைத் தண்ணீரில் கரைத்துவேர்களின் மூலமாக உறிஞ்சி உட்கொள்ளுகின்றது. ஆகையால் அந்தப்பயிரை அறுவடைசெய்து அப்புறப்படுத்துவதால், அந்தநிலத்திலுள்ள பயிருணவில், அந்தமாசூலின் அளவுக்கு, நஷ்டமுண்டாகிறது. அப்படி அறுத்தெடுத்த விளை பொருட்களை அவ்விடத்திலேயே உபயோகப்படுத்தாமல் அயல் தேசங்களுக்கு அனுப்பிவிட்டால் அது அந்த தேசத்துக்கு சாஸ்வதமான நஷ்டமாகிறது. இதுவும் அநேகருக்கு அனுபவ பூர்வமாய்த்தெரிந்த காரியம். இதிலும் கிருஷிகர் சந்தேகங்கொள்ளவேண்டியதில்லை.

என்றாலும், இவ்விராஜதானி முழுவதுக்கும் நேரிடும் நஷ்டத்தைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கக்கூடாது. இந்த நஷ்டம் ஒவ்வொருவருடைய நிலங்களுக்கும் நேரிடுவதாகவே அவாவர்கள் நம்பவேண்டும். அப்போதுதான் அதைத் தடுக்கக்கூடிய வழிகள் என்னவென்று ஒவ்வொருவரும் கவனிப்பார்கள்.

தைலவித்துக்களை அயல் தேசங்களுக்குக் கொண்டுபோய் அவைகளிலிருக்கும் எண்ணெய் எடுத்துக்கொண்டு பிண்ணாக்கைக் கால் நடைகளுக்குத் தீனியாகவாவது, நிலங்களுக்கு எருவாகவாவது உபயோகிக்கிறார்கள். இந்தத் தைலவித்துக்களையும், பிண்ணாக்கு வகைகளையும் இந்தத் தேசத்தில் வியாபாரிகள் கிருஷிகரிடம் விலைக்கு வாங்கி, அதில் தங்கள் செலவு தொகையுடன் லாபத்தையும் சேர்த்து அயல்தேச வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். அவர்கள் கப்பல்கூலி, லாபம், முதலியவைகளைச் சேர்த்து அயல் தே

சங்களில் விலைசெய்கிறார்கள். அவ்வளவு அதிகமான விலைக்கு அந்த வஸ்துக்களை அத்தேசத்தவர்கள் வாங்கி அவைகளைத்தங்கள் நிலங்களுக்கு எருவாக உபயோகித்து அதிலிருந்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். அப்படியிருக்க அந்த வஸ்துக்களை நமது தேசத்துக் கிருஷிகர் ஏன்வாங்கி உபயோகிக்கக்கூடாது? அயல் தேசத்துக்கிருஷிகருக்கு டன் ஒன்றுக்கு 75 ரூபாய் கொடுத்துவாங்கி உபயோகிப்பதில் இலாபம் கிடைக்கக் கூடுமானால், அதே பிண்ணாக்கை நமது தேசத்துக்கிருஷிகர் டன் ஒன்றுக்கு 60ரூபாய் கொடுத்து வாங்கி உபயோகித்தால் இலாபம் ஏன் கிடைக்காது? இதே பிரகாரமாக இத்தேசத்திலிருந்து ஏராளமான மீன் வகைகளை ஜப்பான் தேசத்தவர்கள் வாங்கிக்கப்பலிலேற்றிக்கொண்டு போய்த்தங்கள் நிலங்களில் எருவாக்குகிறார்கள். அதனால் அவர்களுக்கு இலாபம் கிடைக்குமானால், நமது தேசத்தில் அதே மீனைக் குறைந்த விலைக்கு வாங்கி நாம் எருவாக உபயோகித்தால் நமக்குமட்டும் இலாபம் கிடைக்காமல் போகுமா? இதை எல்லாரும் நன்றாய் யோசிக்கவேண்டும்.

நமது கிருஷிகரில் ஒவ்வொருவரும் தம்மூரிலும் சுற்றுப் புறங்களிலும் கிடைக்கக்கூடிய பிண்ணாக்கு வகைகளில் தங்கள் நிலத்துக்கு வேண்டிய அளவை வாங்கி எருவாக்குவார்களானால், தற்காலத்தில் ஏற்றுமதியாகும் பிண்ணாக்கு இரண்டு மூன்று ஜில்லாக்களிலுள்ள நிலங்களுக்குக்கூடக் காணமாட்டாது. அப்படியிருந்தும் கிருஷிகர் இவ்விஷயத்தில் சிரத்தை எடுக்காமலிருப்பது அதிகப் பரிதாபமாயிருக்கிறது. எத்தனையோ கிராமங்களிலிருந்து இந்தப் பிண்ணாக்குகளை வியாபாரிகள் தினந்தோறும் விலைக்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். அப்படி அதை வாங்கிக்கொண்டு போகிறார்கள் என்பது அந்த ஊரிலுள்ள அனேக கிருஷிகருக்குத் தெரிவதில்லை யென்றால் பக்கத்து கிராமங்களிலுள்ளவர்களுக்கு எப்படித் தெரியும். கோயம்புத்தூர்ஜில்லாவில் ஈரோடு தாலூக்காவில் ஊத்துக்குளி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மட்டும் ஒருவருஷத்தில் 20,000 மூட்டை வேப்பம் பிண்ணாக்கு விலையாகின்றது. 1 மூட்டை பிண்ணாக்கு 5 மணங்கு நிறையுள்ளது. சுமார் 90-மணங்கு கொண்டது 1-டன் நிறையாகும். 18-மூட்டைகள் 1-டன் நிறையாகிறது. ஆகவே வருஷத்தில் அந்த ஸ்டேஷனிலிருந்து சுமார் 1110-டன் நிறையுள்ள வேப்பம் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன்விலை (டன் ஒன்றுக்கு ரூபாய் 25-வீதம்) சுமார் 27750 ரூபாய் ஆகிறது இவ்வளவுக்கு அந்த பிராந்தியத்திலுள்ள நிலங்கள் வருஷாவருஷம் நஷ்டமடைகின்றன வென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. இவ்வூரிலும் அதைச்சுற்றிலும் நன்செய் புன்செய் தோட்டக்கால் நிலங்கள் எவ்வளவோ பயிர் செய்யப்படுகின்றன. அவைகளுக்கு இந்தப் பிண்ணாக்கு எருவாய் உபயோகப்படுத்தினால் அவைகளின் வளங்குறையாமலிருக்குமல்லவா?

# கால் நடைகள்

## CATTLE

சாதாரணமாய்க் கால் நடைகளுக்கு வியாதியுண்டாவதற்கு முக்கியமான காரணம் என்னவெனில், இயற்கைக்கு விரோதமாக அவைகளை நடத்துவதுதான். இது எப்படியென்றால் (1) கால் நடைகளை மழைக்கும் வெயிலுக்கும் பனிக்கும் வாடைக்கும் இலக்காக்குவது. (2) ஈரமாயிருக்கும் தரைகளிலும் அசுத்தமான தொழுக்களிலும் அவைகளைக் கட்டிவைப்பது. (3) கோடைகாலத்தில் கால் நடைகளுக்கு வைக்கோல் முதலிய தீவனம் ஒன்றும் போடாமல் காட்டுக்குப்போய் அலைந்துவர விடுவது. (4) சில சமயங்களில் அளவுக்கு அதிகமான தீனிபோடுவது. (5) கால் நடைகளுக்கு அசௌக்கியமுண்டாகும் தீனியை அதிகமாகப் போடுவது. (6) நெல் கதிர்களை அதிகமாகத் தின்னும்படி விடுவது. (7) மழைபெய்தவுடன் உண்டாகும் தண்ணீர்ப்புல்லையும் கோரையையும் மேயும்படிவிடுவது. (8) சீனிக்கிழங்கு (சர்க்கரை வள்ளிக்கிழங்கு) வெட்டி எடுக்கும் காலத்தில் அந்தத்தழையை அளவுக்கு அதிகமாகக் கால்நடைகளுக்குப் போடுவது. (9) சோளம் இளம்பயிரா யிருக்கும்போது அஜாக்கிரதையினால் அந்தப்பயிரைத் தின்னும்படி கால்நடைகளை விடுவது. (10) கால்நடைகளுக்குத் தண்ணீர் வைக்கும் தொட்டியில் அசுத்தமும் துர்நாற்றமும் உண்டாகும்படி விட்டுவைப்பது. (11) அசுத்தமான குட்டங்களில் கால் நடைகளுக்குத் தண்ணீர் காட்டுவது. (12) உழவு காளைகளுக்கு வேலை கடுத்தமாய் இருக்கும் போதுகூடச் சரியான தீவனம் போடாமல் தாற்றுக்கோலால் குத்தி இம்சை செய்து அவைகளை நைந்து மெலிந்து போகவிடுவது. (13) கால்நடைகளைக்கடுவெயிலில் ஏரில் பூட்டி ஓரோட்டாய் வேலை வாங்குவது. (14) தொத்து வியாதிகளுண்டாகும் காலங்களில் கால் நடைகளை மற்ற ஊர் மாடுகளுடன் கலக்கும்படி வெளியேவிடுவது. இவைகளும் இவைபோன்ற இன்னும் அநேக காரணங்களுந்தான்.

நாம் நன்றாய் யோசித்துப் பார்த்தால இவைகளெல்லாம்தடுக்கக்கூடிய காரணங்களேயன்றி வேறல்ல. இனைத்தறியாமல் தொத்துவியாதிகள் நேரிடக்கூடும். இப்படி நம்மையறியாமல் உண்டாகும் சில வியாதிகளைத்தவிர மற்றெல்லா வியாதிகளும் நாம் மேலே சொல்லியபடி தடுக்கக்கூடிய காரணங்களினாலேயே உண்டாகின்றன. இயற்கை அமைப்புக்கு விரோதமில்லாமல் பார்த்துவந்தால் கடவுள் அருளால் நாம் நம்முடைய கால் நடைகளை அநேகமாய்அகாலமரணமடையாமல் காப்பாற்றலாம். ஒவ்வொரு ஊரிலும் ஆயிரக் கணக்கான கால் நடைகள் தற்காலம் மாண்டுபோவது அனியாயம்.

ஆகையால் நாம் செய்யவேண்டிய முக்கியமான காரியங்களாவன:— (1) மழை வெயில் பனி படாமல் சரியான கொட்டகை

களில் கால் நடைகளைக் கட்டிவைக்கவேண்டும்.(2) வாடை காலத்தில் தட்டிகள் கட்டிக்காப்பாற்றவேண்டும். (3)தொழுவிலுள்ள சாணியையும் மூத்திரத்தையும் அப்போதப்போது அப்புறப்படுத்தவேண்டும். கால்நடைத் தொழுக்களில் ஈரமும் சதசதப்பும் உண்டாகாதபடி எப்போது மணல் அல்லது வைக்கோல் சண்டு சருகுகளைப் பரப்பி வைக்கவேண்டும். தொழுக்களின் தளமட்டம் உயரமாயிருக்கவேண்டும். தொழுக்கள் சுத்தமான காற்றோட்டமுள்ள தாயிருக்கவேண்டும். (4) கால் நடைகளுக்குத் தீவனம் போடாமல் பட்டினி கிடக்கவிடக்கூடாது. அளவுக்கு மிகுந்ததும் அசௌக்கிய முண்டாகக் கூடியதுமான தீனிபோடக்கூடாது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழியைக் கவனிக்கவேண்டும். (5) கோடைகாலத்தில் அனேககால் நடைகள் பட்டினிகிடக்கின்றன. மேயவும் புல்கிடையாது. மழை காலத்துக்குப்பின் அனேக ஊர்களில் விளைகளிலுள்ள புல்லையறுத்துக்கட்டு ஒன்றுக்கு அரையணா ஒரு அணாவுக்கு விற்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். சிலசமயங்களில் ஒருவண்டிப்புல் இரண்டு ரூபாய்க்கு விற்கும். இப்படி எங்கும் புல்லுண்டாகுங் காலங்களில் கூலியாட்களைக் கொண்டு காடுகளிலிருந்தும் விளைகளிலிருந்தும் புல்லறுத்துக்கொண்டு வரும்படி செய்து உலர்த்திஅடைந்து பந்தோபஸ்து செய்திருந்தால் அது அருங்கோடைக்கு உதவும். (6) அறுப்புக்காலத்தில் நெல் கதிர்க்கட்டுகள் களமேட்டுக்கு வந்தவுடன் ஓரிடத்தில் அவைகளைத் தலையடியாய் அடித்து நெல்லுதிர்த்தபின் தாள்களிலிருக்கும் மற்ற நெல்லை உதிர்ப்பதற்கே கால் நடைகளைக்கொண்டு மிதிக்கச்செய்யவேண்டும். தற்காலத்தில் அனேகவிடங்களில் இப்படிச் செய்வதில்லை. கதிர்க் கட்டுகள் வந்தவுடனே வட்டமாகப்போட்டு அவைகளின் மேல் கால்நடைகளை ஓட்டுகிறார்கள். இதனால் கால்நடைகள் புது நெல்லை அதிகமாய்த்தின்று அவைகளுக்கு அஜீரணம் உண்டாகிறது. கிருஷிகருக்கும் இதனால் அதிக நெல் நஷ்டம் நேரிடுகிறது. (7) மழை காலத்துக்குப் பின்னுண்டாகும் தண்ணீர்ப் புல்லையும் சோளப்பயிரையும் மேயாமலும், சர்க்கரை வள்ளிக்கிழங்குத் தழை முதலியவைகளை அதிகமாய்த் தின்னாமலும் கால் நடைகளைப் பந்தோபஸ்து செய்யவேண்டும். (8) கால் நடைகள் குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் வைக்க வேண்டும். உழவு முதலான பருவகாலங்களில் கால் நடைகளை மிதமிஞ்சி வேலை வாங்கக்கூடாது. இடையிடையே கொஞ்சநேரம் இளைப்பாறவிடவேண்டும். அப்படி விடும்போது அவைகளுக்குச் சரியான தீனி போடவேண்டும். (9) தொத்துவியாதிகள் உண்டாகுங் காலங்களில் கால்நடைகளை வெளியே விடக்கூடாது. (10)கவிலை, உழவு முதலான வேலைகள் நடக்கும்போது வாரத்துக் கொரு நாளாவது கால் நடைகளுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும். அன்றைக்கு அவைகளைக் குளிப்பாட்டி அவைகளுக்கு விசேஷ போஷணைகொடுக்கவேண்டும்.

# தோட்டம் வைத்தல்
## GARDENING

பூந்தோட்டம், காய்கறித்தோட்டம், பழத்தோட்டம் இவைகளை வைத்து விர்த்திசெய்வதில் நேரிடும் செலவுக்குத் தக்க இலாபம் கிடைக்குமா என்னும் சந்தேகத்தாலும், இவ்வகையான தோட்டங்களினின்று நாம் அடையக்கூடிய அனுகூலங்கள் எல்லாவற்றையும் சரியாய்த் தெரிந்துகொள்ளாததாலும் அநேகர் அவ்விஷயத்தைப்பற்றி யோசிப்பதேயில்லை. நமது தேசத்திலுள்ள ஜனங்கள் பூர்வத்தில் செய்துவந்த அனேக காரியங்களில் "பணம் கிடைக்குமா இல்லையா?" என்பதைமட்டும் யோசித்து அவர்கள் நடக்கவில்லை. பணம் வந்தாலும் வராவிட்டாலும் அவரவர்களுக்கு ஏற்பட்ட சில தொழில்களை விடாமல் செய்துவந்தார்கள். மேலும் சாதாரணமான ஒரு கட்டிடம் அல்லது கோவில் தங்கள் தேவாராதனைக்குப் போதுமானதாயிருந்தாலும் உன்னதமான கோபுரங்களையும், விசித்திரமான மண்டபங்களையும் அவர்கள் கட்டி உபயோகித்து வந்ததின் நோக்கம் என்னவென்று பாருங்கள். இந்தக் கட்டிடங்களுக்கு சென்றிருக்கும் செலவை உத்தேசித்தால் தற்காலத்து ஜனங்கள் அவைகளைக்கட்ட உத்தேசித்தே யிருக்கமாட்டார்கள். என்றாலும் அலங்காரமும் விசித்திரமும் மனக்கிளர்ச்சியையும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய முக்கியமான சாதனங்களென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வீடுகளில் இங்குமங்கும் அழகான படங்களைத் தொங்கவிட்டுவைக்கிறோமே? அது எதற்காக? அந்தப்படங்களைப் பார்த்துநமக்குவயிறுநிறைதா? அப்படி இல்லாவிட்டாலும் அதிக விலை கொடுத்து வாங்கி அவைகளையேன் வீடுகளில் தொங்கவிட்டு வைக்கவேண்டும்? நமதுசரீரத்தை அதிக உஷ்ணத்துக்கும், சீதளத்துக்கும் உட்படாமல் காப்பதற்குச் சாதாரணமான பருத்தி அல்லது கம்பளி வஸ்திரங்கள் போதுமானதாயிருக்க, நூற்றுக்கணக்கான ரூபாய் அள்ளிக்கொடுத்து ஜரிகைபோட்ட பட்டு வஸ்திரங்களையும் ஜரிகைத் தலைப்பாகைகளையும் வாங்கி நாம் ஏன் அணிந்துகொள்ளவேண்டும்? இவ்விதமாக நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அந்தக்காரியம் நமக்குக் கேவலம் அவசியமானதுதானா வென்பதுமட்டுமே யல்லாமல், அதில் அழகும் அலங்காரமும் அமைந்திருக்கிறதா வென்றும் நாம் எப்பொதும் கவனிக்கிறோம். அதுபோல, ஒரு காரியத்தில் பணம் அதிகமாகக் கிடைக்கவில்லையானாலும் அதில் அழகும், அலங்காரமும் அமைந்திருந்து, அதனால் மனக்கிளர்ச்சியும் சந்தோஷமும் உண்டாகக்கூடியதானால் அதைக் கைக்கொள்ளவேண்டும் என்பது எம்முடைய நோக்கம். என்றாலும் தர்க்காலத்தில்வியாபாரத்துக்கும், ரெயில் மார்க்கங்கள் ஸ்தாபிப்பதற்கும், இவை முதலான பல முயற்சிகளுக்கும் பணம்வேண்டுமானால் கூட்டுப்பங்காளிகள் அநேகர் உடனே பணங்கொடுக்க ஒப்புக்கொண்டு வந்து விடுவார்கள். ஆனால் ஒரு விவசாய சங்கம் ஸ்தாபிப்பதற்கு முயற்சித்தாலும், ஒரு உல்லாசப் பூந்தோட்டம் வைப்பதற்காகப் பங்காளிகள் வேண்டுமென்று சேர்க்கப் பிரயாசைப்பட்டாலும் ஒருவரும் சந்தோஷத்துடன் சேரமாட்டார்கள். ஏனென்று விசாரித்தால் "அதில் பணம் வருமா?" என்று கேட்பார்கள். என்ன முயற்சியிலும் "பணம்", "பணம்", "பணம்.", என்றுதான் இவ்வுலகம்மாய்வது. பணமில்லாமல் ஒரு விஷயமும் நடக்காது. இயற்கையற்புதங்களில் பிரியமும், அழகும் அலங்காரமும் வாய்ந்த வஸ்துக்களில் மகிழ்ச்சியும் கொள்ளக்கூடியவர்களே தோட்டம் போடுவதில் இயல்பிலேயே பிரியமுடையவர்களாயிருப்பார்கள். ஒருவர் தம் வீட்டுக்கு முன்னிருக்

கும் கொஞ்ச விஸ்தீர்ணத்தில் சிலபுஷ்பச்செடிகளையும், சில காய்கறிகளையும், பழவர்க்கச்செடிகளையும் வைத்து உண்டாக்கினால், அவரை மற்றவர்கள் ஏளனம் செய்வதே வழக்கமாயிருக்கிறது. "இதில் காலைமாலைகளில் கடும்பாடு பட்டு உழைத்து வருகிறீரே? இந்தப் பிரயாசைக்குத் தக்க பலன் இதில் உமக்கு என்ன கிடைக்கிறது? இதில் நீர் செலவிடும் பணத்துக்கும், காலத்துக்கும், பிரயாசைக்கும் தக்கதான இலாபத்தில் பத்துக்கு ஒன்றாவது கிடைக்குமா? இதைவிட வேறு ஏதாவது ஒரு முயற்சியில் பணம் செலவிட்டால் சரியான இலாபம் அடையலாமே!!'' என்பார்களேயொழிய அந்தத் தோட்டம் வைத்துண்டாக்கிவருபவர் என்னகாரணத்துக்காக அவ்வளவு பிரயாசைப்படுகிறார் என்று கவனிப்பார் ஒருவருமில்லை.

காலை மாலையில் லீலைச்சோலையி லுலாவிவருதலும், புஷ்பச்செடிகளை நடுதலும் அவைகளுக்கு எருவைத்துத் தண்ணீர் பாய்ச்சலும், மனோவியாகுலத்தை நிவர்த்தித்து மனோ உற்சாகத்தை உண்டாக்கும். தோட்டம் வைத்துண்டாக்கவேண்டுமானால் அதில் எல்லாக்காலங்களிலும் தேகப்பிரயாசை வேண்டியதாயிருக்கிறது. மன உழைப்பு அதிகமாயுள்ளவர்கள் எல்லாருக்கும் தேகாப்பியாசம் பிரதிதினமும் இருக்கவேண்டியது வெகு அவசியம். தோட்டம் போடுவதில் தேகாப்பியாசத்துக்கு இடமுண்டாவதுமன்றி, சுறுசுறுப்பும் ஏற்படுகிறது. இவைகளினால் மன உழைப்பு மிகுதியாய் உள்ளவர்களுக்கு அஜீரணம், இளைப்பு, ஸ்தூலசரீரம் முதலான அசௌக்கியம் உண்டாகாமல் திடசரீரம் ஏற்படும். மேலும் விதை விதைக்கு முன்னமே நிலத்தைக்கொத்தி எருவிட்டு அதைக் கவனத்துடனும், ஒழுங்குடனும் பருவப்படுத்துவதில் ஒருவருக்கு உண்டாகும் சந்தோஷமும் திருப்தியும், குழந்தைபெற்றுச் சுகமடைய எண்ணியிருக்கும் ஒரு தாயானவள் தான் பெற்றெடுக்கப் போகும் குழந்தைக்கு அவசியமான அநேகம் காரியங்களை முன்கூட்டியே ஊக்கத்துடன் செய்து வருவதில் அடையும் திருப்திக்கும் சந்தோஷத்துக்கும் சமானமாயிருக்கிறது. விதை விதைத்து முளைகிளம்பினது முதல் செடியானது வளர்ந்து தளிர்த்துக் கிளைத்துப் பரவி அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிகொடுக்கும் வரை ஒவ்வொருநாளும் அந்தச் செடியில் உண்டாகும் வித்தியாசமான அபிவிர்த்தியையும், அதின் புஷ்பங்களிலுண்டாகும் மனோஹரமான வாசனையையும், அதின் இலைகளிலும் பூவிதழ்களிலும் கடவுளின் அமைப்பால் உண்டாகும் பலவிதமான விநோதவர்ணங்களையும், கனிவர்க்கங்கள் பக்குவப்பட்டு உணவுக்கு உபயோகப்படும்போது அவைகளில் உண்டாகும் அமிர்தம்போன்ற அநேகவிதமான ருசியையும் கவனிப்பதில் ஒருவருக்குண்டாகும் சந்தோஷத்தைப் பார்க்கிலும்மேலான சந்தோஷம் வேறு ஒன்றிலும் கிடையாதென்றே சொல்லலாம். நமது சொந்தத்தோட்டத்தில் நாமே வைத்துத் தண்ணீர் வார்த்து வளர்த்த செடிகளிலுண்டாகிய புஷ்பங்கள், நமக்கு எவ்வளவு மனோஹரமாயிருக்கின்றன! அவைகளிலுண்டாகும் காய்களும் கனிவர்க்கங்களும் நமக்கு விசேஷ ருசியைக் கொடுக்கின்றனவல்லவா? மேலும் நினைத்தவுடன் தோட்டத்துக்குப்போய் நமக்குப் பிரியமுள்ள காய்கறி வகைகள் எவையோ அவைகளைப் பறித்து உடனே புதிதாய்ச் சமைத்துக் கொள்ளும் சௌகரியம் மற்றவர்களுக்கு உண்டா?

இவ்விதமாகத் தோட்டம் வைப்பதில் தேக சௌக்கியம், தேகதிடம், மனக்கிளர்ச்சி, சந்தோஷம், சௌகரியம் முதலான அநேக அனுகூலங்களை நாம் அடைகிறோம் ஆதலால் கூடியமட்டும் ஒவ்வொருவரும் தோட்டம் வைத்துப் பலனடையும் பொருட்டு இவ்விஷயத்தைப் பற்றிக் கொஞ்சங் கொஞ்சமாய் நமது பத்திரிகையில் இனிமேல் எழுதி வருவோம்.

# பழமொழிகள்

## OLD SAYINGS

வேதநூன் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே
கோதைவேன் மன்னவர்தம் குடைவளமும் கோழவளமே
ஆதலால் இவர்பெருமை யார்உரைக்க வல்லவரே.

இந்தக் கவி கம்பர் எழுதிய ஏர் எழுபதுஎன்னும் புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது. இதனால் கிருஷிகரின் பெருமை வெளியாகின்றது. இவ்வுலகத்தில் வேதத்துக்கு மேலானது ஒன்றுமில்லை. வேதத்தினால்தான் இவ்வுலகம் நிலைத்திருக்கிறது. வேதத்தினாலேயே கடவுளைப் பற்றிய ஞானம் எல்லாருக்கும் உண்டாகிறது. வேதத்தின் மூலமாகவே தர்மார்த்த காம மோக்ஷமாகிய நான்குவித புருஷார்த்தங்கள் மனிதருக்குக் கிடைக்கக்கூடும். வேதம் ஓதுதல் இக்காரணத்தினால் எல்லாவிதக் கல்வியிலும் மேலானது. வேதம் ஓதுகின்றவரும் "உழுவார் தம் தலைக்கடைக்கே" என்றுசொன்னால் மற்ற சாஸ்திரங்கள் கலைக்ஞானங்கள் முதலிய சகல கல்விகளையுங் கற்றவர்கள் எல்லாரும் கிருஷிகருக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று சொல்லவேண்டியதில்லை. புஜபல பராக்ரமுள்ள சக்கரவர்த்திகளின் ஆளுகையின் பெருமையும் கிருஷிகரைப் பொருத்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராஜாங்கம் பணமில்லாமல் எப்படி நிலைபெறும்? கிருஷிகரிடத்திலிருந்து நிலத்தீர்வை வசூல் செய்யாவிட்டால் சக்கரவர்த்தியின் பொக்கிஷம்வெறுமையாயிருக்குமென்பதில் என்னதடை? ஆகையால் அரசருடையபெருமை கிருஷிகரின் செல்வத்தைப் பொருத்திருக்கிறது என்று தாராளமாய்ச் சொல்லலாம்.

கிருஷிகரின் வளம் அவர்களின் கிருஷியைப் பொருத்ததாயிருக்கிறது. அவர்களுடைய கலப்பைக்கொழு சரியாய் வேலைசெய்யுமானால் பயிர்கள் நன்றாய் வளர்ந்தோங்கி அவர்களின் செல்வம் விர்த்தியடையும். இதனாலேயே ஔவையார் சோழராஜனுக்கு முடிசூட்டுங்காலத்தில் "குடி உயர முடி உயரும்" என்று அவ்வரசனை ஆசீர்வதித்தார்.

எல்லாரும் கிருஷிகரால் விளைவிக்கப்படும் விளைபொருட்களை உண்டு ஜீவிக்கவேண்டுமேயன்றி, அவர்கள் பொக்கிஷங்களில் நிறைந்துள்ள பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும், நவரத்தினங்களையும் சாப்பிட்டுப் பசி தீர்க்க முடியுமா? க்ஷாமகாலம் சம்பவிக்கும்போது கடைகளில் தானியமில்லாமல் போகும் சமயங்களில் எவ்வளவு அதிகார சம்பத்துக்களுள்ளவர்களானாலும், குதிர்களில் தானியத்தைக்கட்டிவைத்துக் கொண்டிருக்கும் கிருஷிகரிடத்திலுள்ள தானியத்தை வாங்கிச் சாப்பிட்டாலொழிய அவர்களுக்கு வேறு கதி என்ன இருக்கிறது? இந்தக் காரணத்தினாலேயே—

இராஜன்.—"நான் உலகத்தோரெல்லாரையும் காக்கிறேன்."

குரு.—"நான் உலகத்தவர்களுக்கு மோக்ஷ வழியைக் காட்டுகிறேன்."

நியாயவாதி.—"நான் உலகத்தவர்களுக்காக நியாயவாதம் புரிகிறேன்."

நியாயாதிபதி.—"நான் உலகத்தவர்களின் வழக்குகளைத் தீர்மானஞ் செய்கிறேன்."

வைத்தியர்.—"நான் உலகத்தவர்களின் வியாதிகளை சொஸ்தப்படுத்துகிறேன்." என்று இப்படி அனேகர் அனேகவிதமாகத் தத்தம் காரியங்களைப் புகழ்ந்து கூறவும், கிருஷிகன் "நான் உலகத்திலுள்ள எல்லாருக்கும் உணவு கொடுத்துப் போஷிக்கிறேன்" என்று சொன்னனாம்.

# ஐப்பசிமாதப் பருவங்கள்

## MONTHS OPERATIONS

செங்கற்பட்டு ஜில்லா.—இந்த ஜில்லாவில் இளநெல் தினுசுகளின் விதைப்பு இம்மாதத்துடன் முடியும். கேழ்வரகுங் கொள்ளும் விதைப்பாகும்

தென்னார்க்காடு ஜில்லா.—நன்செய் நிலங்களில் இளநெல் தினுசுகள் விதைப்பாகும். சில விடங்களில் கரும்பு நடுவார்கள். புன்செய் நிலங்களில் சோளம் கேழ்வரகு கொள்ளு அவுரிப்பயிர்கள் விதைக்கலாம்.

தஞ்சாவூர் ஜில்லா.—பட்டுக்கோட்டை தாலூகாவைத் தவிர மற்ற விடங்களிலெல்லாம் சம்பா நெல் தினுசுகள் பயிர் செய்யலாம். கேழ்வரகும், மக்காச் சோளமும் இம்மாதம் சாகுபடி செய்யலாம். பட்டுக்கோட்டைத் தாலூகாவில் இம்மாதம் எள் சாகுபடி செய்யலாம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா.-குளித்தலை தாலூகாவில்சம்பா நெல்பயிராகும். இந்த ஜில்லாவின் வடபாகத்தில் புன்செய்களில் நெல் விதைப்பாகும். கம்பு, கேழ்வரகு, சாமை, வரகு கடலை, பச்சைப்பயறு, கொள்ளு, பருத்தி, ஆமணக்கு விதைப்பார்கள்.

தென்பாகத்தில் பருத்தி கொத்தமல்லி விதைப்பார்கள்.

மதுரை ஜில்லா.—மேல் பாகத்திலும் தென் பாகத்திலும் இளநெல் தினுசுகள்விதைப்பாகும். கொடைக்கானல் தாலூகாவில் கோதுமையும் சம்பா நெல்லும் விதைப்பாகும்.

புன்செய்களில் சோளம், கம்பு தினை, சாமை, பருத்திகடலை, பச்சைப் பயறு, கொள்ளு, உளுந்து இவைகளின் விதைப்பு இம்மாதத்துடன் முடியும். திருமங்கலம் தாலூகாவில் வரகு விதைக்கலாம். இறவைக்கம்பும், புகையிலையும், வெள்ளைப்பூண்டும் இந்தமாதம் பயிர் செய்யவேண்டும்.

திருநெல்வேலி ஜில்லா.—பிசானம் நெல் நடுகை முடிவாகும்.

புன்செய்களில் சோளம், கம்பு, காடைக்கண்ணி, குதிரை வாலி கொள்ளு, உளுந்து விதைப்பார்கள். பயறு வகைகளையும் இந்த மாதம் மேட்டுப் போக்குகளில் விதைக்கலாம். கரிசலில் பருத்தி விதைப்புநடக்கும்.

சேலம் ஜில்லா.—ஆத்தூர், நாமக்கல் தாலூகாக்களில் நன்செயில் கேழ்வரகு பயிரிடக்கூடும். சேலம், நாமக்கல் தாலூக்களின் புன்செய் நிலங்களில் சோளம் விதைப்பார்கள். எல்லாவிடங்களிலும் கடலை, பச்சைப் பயறு கொள்ளு இந்தக் காய்த் தானியங்கள் விதைப்பாகும். புகையிலையும், மஞ்சளும், தோட்டக்கால்களில் இம்மாதம் பயிர் செய்யவேண்டும்.

வட ஆர்க்காடு ஜில்லா.—நன்செய் நிலங்களில் சம்பா நெல் சாகுபடியாகும். புன்செய் நிலங்களில் சோளமும் கொள்ளும் விதைப்பாகும். சில விடங்களில் நிலக்கடலையும் அவுரியும் பயிராகும்.

கோயம்பத்தூர் ஜில்லா.—ஈரோடு தாலுகாவில் நன்செயில் கேழ்வரகு சாகுபடி செய்வார்கள். கொள்ளேகாலம் தாலுகா தவிர மற்றெல்லா இடங்களிலும் சோளம் கடலை, கொள்ளு, உளுந்து பயிர்கள் விதைப்பார்கள் உடுமலைப்பேட்டை தாலூகாவில் வரகும், கோதுமையும் விதைப்பாகும். மஞ்சள் நடுவார்கள். கொத்தமல்லி விதைப்பாகும்.

நீலகிரி.—குன்னூரில் கோதுமையும் வாற்கோதுமையும் விதைக்கலாம்.

# சிவகிரி ஜமீன் சொந்தப்பண்ணை

## SIVAGIRI HOME FARM

திருநெல்வேலி ஜில்லா சிவகிரிஜமீன் சொந்தப் பண்ணையில் நெல் சாகுபடியில் நடத்தியிருக்கும் அபிவிருத்தியைப்பற்றிய சிறு புத்தகம் என்று நமக்குக் கிடைத்தது. அதிலடங்கியமுக்கிய விஷயங்களை அடியில் விவரித்திருக்கிறேம்.

(1) உழவு.—சீர்திருத்திச்செய்த இரும்புக் கலப்பை ஒன்றுக்கு சுமார், ரூ 6 கிரயம் ஆவதாயும், அதினால் உழுவதில் மண் மேல் கீழாய் மாறி, களைப் புல் எடுபட்டு மண்சரியாய்ப் பக்குவப்படுவதற்கு இடமுண்டாகிறதாம் அதை சாதாரண உழவு மாடுகள் வருத்தமில்லாமல் இழுக்கிதறாம்.

(2) எருவிடுதல்.—(*a*) தொழு எருச்சேர்ப்பதில் சாணியுடன் கால் நடைகளின் மூத்திரத்தையும் சேர்த்து செத்தையுடன் கலந்து அதற்கு மேல் குளத்தின் வண்டல் மண்ணைப் பரப்பிவைத்து அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி உபயோகிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(*b*) தழை எரு.—சமீபத்திலுள்ள புன்செய்க் காடுகளில் வளர்ந்திருக்கும் செடிகளின் தழைகளைக் கொண்டுவந்து எருவாகப் போடுகிறார்கள்.

(*c*) பிண்ணாக்கு எரு.—ஆமணக்கு, வேப்பம், புன்னைப் பிண்ணாக்கும் உபயோகிக்கிறார்கள்.

(*d*) பசுந்தாள் எரு.—வுக்காகப் பலவகைப் பயிர்களை விதைத்துண்டாக்கி நிலத்தில் உழுவது. இதனாலேயே இந்தநிலங்கள் அதிக விர்த்தியடைந்திருக்கிறதாம், ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 6-அணா விதையின் கிறயத்துக்கும், சுமார் 12-அணா உழவு கூலிக்கும் செலவழித்தால், பத்துப் பதினைந்து ரூபாய் பெறுமானதழை எரு கிடைக்கிறதாம்.

(*e*) சடம்புப்பயிர்.—நிலத்துக்குப் பசுந்தாள் எருவாக உபயோகப் படுத்தினால் ஏக்கர் ஒன்றுக்கு 700-பக்காப்படி நெல் விளைந்த நிலங்கள் 1225-பக்கா நெல்வீதம்விளைவித்ததாகத் தெரிகிறது.

(*f*) குளத்துவண்டல் மண்ணையெடுத்துக் களர் நிலங்களில் கொட்டி அவைகளை வெகுவாய் விர்த்தி செய்திருக்கிறார்கள்.

(3) நீர்ப்பாய்ச்சல்.—தற்காலத்தில் குடிகளால் நன்செய்ப்பயிருக்கு உபயோகிக்கப்பட்ட தண்ணீரின் அளவு அதிகம் என்றும் அதில் பாதிகூடப் போதுமானதென்றும் எழுதியிருக்கிறார்கள்.

(4) நெல் சாகுபடியில் ஒற்றைநாற்றுநடுகை,—செய்வதால் விதையின் அளவை வெகுவாய்க் குறைத்துவிடலாம் என்றும், ஏக்கர் ஒன்றுக்கு இப்போது செல்லும் விதையின் அளவு 16-பக்காவென்றும், இதை இன்னமும் பாதியாக்கலாம் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

(5) ஸ்வர்ணவாரி, பாங்கு முதலான நூதன நெல்தினுசுகளைக்கொண்டுவந்து பயிரிடுவதால் தண்ணீர்த்தட்டை அதிகமாகத் தாங்குகின்றனவென்றும், மற்ற தினுசுகளைவிட அவை சீக்கிரமாக விளைவுக்கு வருகின்றனவென்றும் தெரியவருகிறது.

(6) விதைபோருந்துவதால் விளைவையும் தண்ணீர்த்தட்டைத் தாங்கும் குணத்தையும் விர்த்திசெய்யலாம் என்றும் தெரிகிறது.

(7) நன்செய் நிலங்களில் கோடை உழவின் முக்கியபயன்களாவன:—

(a) அடுத்துச் செய்யும் பயிருக்கு அதிகமான பயிருணவு அகப்படும்படி செய்யும்;

(b) மண்ணில் காற்றுபுகுந்து நெல் பயிரின் வேர்கள் ஆழமாய் இறங்கும்படி செய்யும். இதனால் பயிர்கள் தண்ணீர்த்தட்டை தாங்குவதுமன்றி, அவைகள் பயிருணவைச் சேகரிக்கும் விஸ்தீரணமும் அதிகமாகின்றது;

(c) களைகளும் எடுபட்டுப்போகின்றன;

"நன்செய் நிலங்களை வரண்டகாலத்தில் உழுதுபோட்டுவிட்டால், கால்நடைகளுக்குப் போஷணையெங்கே?'' என்று அநேக கிருஷிகர் கேட்கிறார்கள். கால் நடைகளின் மேய்ச்சலுக்குப் பதிலாகக் கொஞ்சம் செலவில் சடம்பு முதலான கால்நடைத் தீவனப்பயிர்களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

(3) சிவகிரி சொந்தப்பண்ணையில் பயிரிடப்படும் நெல்வகைகள்.—

மணல்வாரி.—காரிலும் பிசானத்திலும் பயிரிடலாம். நான்குமாதப் பயிர் ; பருநெல் ; உள்ளூர் தினிசு ; அரிசி சிவப்பு. 1907-ம் ஷுத்து கார்ப் பயிரின் மாசூல் ஏக்கர் ஒன்றுக்கு 944 நிறை பக்கா.

சித்திரைக் காலி.—கார்த்தினுசு ; மூன்றமாதப்பயிர் ; பருநெல் ; உள்ளூர் தினுசு ; வெள்ளை அரிசி; 1906-ம் ஷுத்து கார்ப்பயிரின் சராசரி மாசூல் ஏக்கர் 1-க்கு 875 நிறை பக்கா. பச்சரிசிக்காகக் குத்தும்போது அரிசி உடைந்து நொய்யாவதில்லை.

ஹல்கி.-நூதனமாய்க் கொண்டுவந்து பயிரிடும் தினுசானதால், இதைப் பயிரிடத் தகுந்த சரியானகாலம் இன்னதென்று இன்னமும் தெரியவில்லை. அது நான்குமாதப் பயிர் ; பொடிநெல் ; வாசனையுள்ளது ; 1907, 1908-ம் ஷுங்களின்பிசான மாசூல் ஏக்கர் 1-க்கு 918 நிறை பக்கா. இந்தத்தினிசுக் கதிர்களின் நெல்லில் நீண்டவால் உண்டு.

பாங்கு.—நாகப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்ட நான்கு மாதத்தினுசு; நேர்த்தியான நீண்ட, மெல்லியநெல்; வைக்கோல் நயமானது; அதிகமாய்க் கிளைத்து மூடுகட்டும்; தண்ணீர்த்தட்டை தாங்கும்; எளிதில் குத்தி அரிசி எடுக்கலாம்; அரிசியில் தசையுண்டாக்கும் சத்து அதிகமிருக்கிறது. 1905, 1906-ம் வருஷங்களில் பிசானத்தில் ஏக்கர் 1-க்கு 1332 நிறை பக்கா நெல்லும், 1600 இராத்தல் நிறையுள்ள வைக்கோலும் சராசரியில் கிடைத்தது. அந்த நிலங்கள் நூதனமாய்ச் செய்த இரும்புக் கலப்பைகளைக்கொண்டே உழவு செய்யப்பட்டன. அவைகளில் கொழுஞ்சி விதைத்துண்டாக்கித்தழையெருவாக நிலத்தில் உழுதுவிட்டதைத்தவிர வேறு உரம் போடவில்லை. அக்டோபர்மீ 10 தேதி நாற்றங்காலில் விதை விடப்பட்டது. நவம்பர்மீ 10௳ முதல் ஒரு சாண் இடைவிட்டு ஒவ்வொரு நாற்றாய் நடுகை செய்யப்பட்டது. பிப்பிரவரிமீ 9-௳ முதல் அறுவடை செய்யப்பட்டது. நெல் ரூபா 1-க்கு 10 படி முதல் 11 படி வீதம் விலை செய்யப்பட்டது. பயிர் அறுவடைக்கு முன் இரண்டு மாதங்களில் தண்ணீர்த் தட்டு நேரிட்டதால், நிலத்தில் கொஞ்சங் கொஞ்சந் தண்ணீர் பாய்ச்சி நனைத்துக்கொண்டு வந்தார்கள்.

பாக்ஷாபோக.—நான்கு மாதப் பயிர்; நூதனமாய் வட இந்தியாவிலிருந்துகொண்டு வரப்பட்ட கொஞ்சம் வாசனையுள்ள பொடிநெல். பொடி அரிசி; நெல் நீளமில்லாதலால் அரிசி குத்தும்போது உடைவதில்லை. நன்றாய்ப் பக்கம் வைத்துக் கிளைக்கிறது. 1906, 1907-ம் வருஷங்களின் பிசானப்பயிரில் ஏக்கர் 1-க்கு 1012-நிறைபக்கா வீதம் மேனிகண்டது.

ஸ்வர்ணவாரி.—கூடலூரிலிருந்து புதிதாய்க் கொண்டுவரப்பட்ட 3½-மாதத் தினுசு. காரிலும் பிசானத்திலும் சாகுபடி செய்யலாம். 1907-ம்வருஷத்து கார்ப்பயிரின் சராசரி மாசூல் ஏக்கர் 1-க்கு 897-நிறை பக்கா. பிசானத்தின்மேனி 954-பக்கா. அரிசி வெண்மையாயிருக்கிறது. அறுவடையாகும் காலம் வரையிலும் தாள்கள் பச்சையாகவே யிருக்கின்றன.

பூம்பாளை.—பிசானத்தில் பயிராகும் ஐந்து மாதப்பயிர்; உள்ளூர் தினுசு; நடுத்தரமான நெல். 1907, 1908-ம் வருஷங்களில் பிசானப் பயிரின் மாசூல் ஏக்கர் 1-க்கு 997-நிறைபக்கா.

தலைவாழை.—6-மாதப் பயிர். பருநெல், தண்ணீர்க் கட்டுள்ள நிலத்தில் பயிரிடத் தகுந்த பிசானத்தினுசு.

ஆனைக்கொம்பன்.—பிசானத்தில் சாகுபடியாகும் 6-மாதப் பொடி நெல் தினுசு. உள்ளூர் தினுசுகளிலெல்லாம் மேன்மையானது. 1906, 1907-ம் வருஷங்களின் பிசானப்பயிரின் சராசரி மாசூல் 1150-நிறைபக்கா.

4. 1907-ம் வருஷம் ஏப்ரல்மூ 30-ந் தேதியுடன் முடிவான ஒரு வருஷத்துக்கு சிவகிரியில் சாகுபடியான நெல் மாசூல் விவரம்.—காரில் கிடைத்த சராசரி மாசூல் ஏக்கர் 1-க்கு 890 நிறை பக்கா. பிசானப் பயிரின் சராசரி மாசூல்ஏக்கர் 1-க்கு 886-பக்கா. இரண்டுபோகத்துக்கும் ஏக்கர் 1-க்கு 1340 பக்கா வீதம் மாசூல் கிடைத்திருக்கிறது. 100 நிறை பக்காவுக்குக் கிரையம் ரூ 9 ஆகக் கணக்கிட்டுப்பார்த்தால் அந்தவருஷம் விளைவான நெல்லின் விலை 30484 ரூபாயாகிறது. ஏக்கர் 1-க்கு சராசரியில் விளைவான 1340 பக்கா நெல்லின் விலை ரூ 120-10-0 ஆகிறது. 100 பக்கா நெல்விளைவிக்கச் சென்ற செலவு ரூ 2-12 ஆகிறது. செலவு நீக்கி ஏக்கர் ஒன்றுக்குக் கிடைத்த இலாபம் ரூ 83-10-0 ஆகிறது.

## புத்தக வரவு

### BOOKS RECEIVED

சென்னை விவசாய டைரெக்டரவர்களிடமிருந்து இவ்விராஜதானியின் கால்நடை வைத்திய இலாக்காத் தலைவராகிய லெப்டினண்டு கர்னல் W. D. கன் துரையவர்களால் எழுதப்பட்ட தென்னிந்தியா கால்நடைகள் என்னும் புத்தகம் வரப்பெற்றோம். அதில் மைசூர், ஆலம்பாடி, ஒங்கோல் (நெல்லூர்), காங்கயம், புலிக்குளம், தஞ்சாவூர் முதலிய வர்க்கப்பசுக்களும், காளை, கன்றுகளும், நாட்டு வர்க்கக்கால் நடைகளுமாகிய எல்லாவற்றையும் காட்டக்கூடிய நேர்த்தியான பல சித்திரப்படங்கள் அடங்கியிருப்பதுமன்றி, அந்தந்த ஜாதிக்கால் நடைகளின் இலக்ஷணங்களும், அவைகளை வளர்த்து விர்த்திசெய்யும் முறைகளும், இக்கால் நடைகளை விலைக்கு வாங்கும் சந்தைகள் முதலான பல உபயோகமுள்ள விவரங்கள் அடங்கியிருக்கின்றன. இதற்காக நாம் கவர்ண்மென்டாரவர்களுக்கு அதிக நன்றியதலுள்ளவர்களாயிருக்கிறோம்.

# விதைக் கலப்பையின் உபயோகம்

## THE USES OF THE SEEDDRILL

1. பருத்திமிகப் பயிர்செய்து பலனடையப் பார்க்கும்
பல்லோரும் பாரிலுள்ள விதைக்கலப்பை பாரும்.
திருத்தமுடன் நேர்சாலாய்த் தினமும்நா லேக்கர்
திட்டமாய் விதைத்திடுதல் தீர்மானம் தேரும்.
2, சிறியஇரும் புக்கொழுவைச் சேர்த்தமரக் குற்றி
திரமோடிரண் டைத்தனியே செய்தவற்றைச் சீராய்
குறியமரத் துண்டிலவை இடைவிட்டுக் கொழுவி
கூர்கலப்பை இரண்டொன்று கூட்டியது போல,
3. செய்துதனி மேழியொன்றை அம்மரத்திற் செருகி
சிறந்தவொவ்வோர் குற்றியிலும் சிறுதுளைகள் செய்து
செய்துளைகள் இரண்டிலுமூங் கிற்குழல்கள் செலுத்தி
சேருமதன் உச்சிதனில் உடுக்கையினைச் சேர்த்து,
4. பிளவேர்க்கால் ஒன்றந்தப் பெருமரத்தில் இணைத்து
பிரத்தியேக மாயுடுக்கை பிறழாமற் பின்னல்
அளவாக வேய்க்குழல்கள் அசையாமற் கயிற்றால்
ஆற்றலுடன் பிணித்திருக்கும் விதைக்கருவி அதுவே.
5. அழகாமிவ் விதைக்கருவி அயல்தேசத் திருந்து
ஆங்கிலர்கள் அனுப்பியதாய் அய்யங் கொள்ளாதீர்
பழமையாக வேகடப்பை பல்லாரி கர்னூல்
பாங்குகளிற் பருத்திமுதற் பல்பயிர்கள் விதைப்பார்.
6. நாகரீகம் மட்டான நமதுவிவ சாயர்
நாணயமாய்ச் செய்தஇந்த நற்கருவி தன்னை
ஊக்கமுடன் சோதனைசெய் தற்றபயன் ஓர்ந்தே
உபயோகஞ் செய்யார்கள் உண்மையுண ராமல்.
7. பார்த்தவுடன் இக்கருவி பழுவான தென்றும்,
பலகுதிரை யானைகளே பாங்காகு மென்றும்,
சேர்த்துழவு மாடுகளிக் கலப்பைதனைச் சிறிதும்
சீருடனே இழுப்பதற்குத் திறலற்றன வென்றும்.
8. இப்படியே பலபலவாம் இகழ்ச்சியுரை பேசி
இதுநமக்கே இசையாதென் றெண்ணுகிறார் இவரும்,
செப்புமொழி தப்பென்று சிறிதுமிவ ரெண்ணார்;
சிலர்களிதை யுபயோகம் செய்வதையும் பாரார்.
9. விவசாய விருத்திமிக விரும்புமறி வுடையீர்!
வெகுநல்ல கலப்பையிதன் விசேஷத்தைக் கேளும்.
அவசரமாய் விதைப்பதனுக் காம்பருவம் வாய்த்தால்
அதிகநிலம் கைவிதைப்பால் ஆகாது பாரும்.
10. அக்காலம் கைவிதைப்புச் செய்துமதன் பின்னே
ஆகுமொரு நாளுழுதால் அரையேக்கர் தானே;
திக்கெல்லாம் விதைப்பாகுந் தினமூந்தீ விரமாய்
திரண்டவிதைப் பருவமது காய்ந்துதிகைப் பாகும்
11. தத்தரவில் இக்கருவி தாழ்ந்ததுநா லேக்கர்
தருணமது தவறாமல் தாவிவிதைத் திடுமே.

மித்திரரே! இதனாலே நீரடையும் மேன்மை
மிக்கதெனத் தக்கதென மேவியுணர் வீரே.

12. கையாலே விதைத்திடிலோ கலப்பாகும் ஒருசார்,
கண்டபடி நெருக்கமதாய்க் காட்டும்பின் னொருசார்;
மெய்யாகச் சிலவிதைகள் மேற்பரவு மொருசார்:
மேலுஞ்சில் விதையாழம் மிகப்புதையு மொருசார்.

13. மேற்பரப்பில் விழும்வித்து முளையாது, மேலும்,
மிகஆழம் புதைவித்து வெந்தழுகும் வீணாய்;
ஏற்படுமே இடைவெளிகள் கலந்தவிதைப் பானால்:
எங்கும்பயிர் நெருங்கிவிடில் எய்துபயன் குறைவே.

14. விதைக்கலப்பை வித்திடிலிவ் விக்கினங்கள் இல்லை,
விதையெலாந் தானமொடு புதைந்துமுளை மேவும்;
சிதைத்திடலாம் களைப்பூண்டைச் சீராம்தந் துலுவால்:
சீர்சாலில் வரிசையுறச் செய்யும்விதைப் பதனால்.

15. கைவிதைப்பில் ஆள்விட்டே களைவெட்ட வேண்டும்,
கலப்பைகொடு பயிரடிக்குங் காரியங் கூடாதே;
செய்வகையால் களைவெட்டிச் சேதிக்கச் செல்லும்
செலவுமிக அதிகமெனச் செப்பாமல் தெரியும்.

16. பருத்திமிகப் பயிராகும் பண்பான கரிசல்
பதமழையின் தண்ணீரும் பனிநீரும் தன்பால்
இருத்திவெகு நாட்காக்கும் எளிதில்வடி யாமல்;
ஈரமுலர்ந் தாவியதா யேகாமற் பார்க்கும்.

17. அதனால்தான் கரிசலினில் அருங்கோடையினிலும்
அமோகமதாய் வளர்ந்துபயி ராதல்நுங் கண்ணி;
பதமழைபெய் யாவிடினிம் பருத்திவெகு வாகப்
பசுமையுடன் பூத்துமிகப் பருத்தகுளை வெடிக்கும்.

18. இளவேனில் முதுவெனில் இரண்டுபரு வத்தும்
இதமான பதமழைகள் இல்லாமற் போனால்;
களரில்லாக் கரிசல்மிகக் காய்ந்திருகிச் சுருங்கிக்
கமர்வெடித்துக் கால்புகுவ தானவெளி காணும்.

19. அதனாலே ஆதித்தன் அடுகிரணம் புகுந்து
ஆழத்துள் ஈரமெல்லாம் ஆவியதாய்ப் போக்கும்;
பதமில்லா ததனாலே பருத்திமிக வாடி
பதைப்புடனே காய்த்தோய்ந்து பலன்குறைந்து போகும்.

20. ஆதலினால் பயிர்வரிசை களினூடே அளவாய்
அகன்றமடி தந்துலெனும் கருவியதனாலே
சேதமிலாமல்உழுதால், சிறிதும் வெடிப் பின்றி
சேர்ந்துமண் ணணைந்துபயிர் செழித்தோங்கி நிற்கும்.

21. இவ்விரண்டு கருவிகளை இங்கேநாம் செய்ய
ஈரேழு ரூபாய்கள் எவ்விதமும் ஆகும்;
செவ்வையாகக் கால்நடைகள் சிரமமின்றி இழுக்கும்:
செப்பனிடல் கொல்லனுநம் தச்சனுமே செய்வார்.

22. சென்றவரு டந்திருநெல் வேலி யெனும் ஜில்லா
சிலஊரில் சிலகுடிகள் சிற்சிலவாம் நிலத்தில்
நன்றியுடன் விவசாய நண்பர்கள் தூண்டுதலால்
நலமாமிக் கருவிகளால் நாணமுடன் விதைத்தார்.

23. தெய்வ அனு கூலமதால் தேடினுமப் பயிர்க்கெத்
திக்கினுமீ டில்லையெனத் தேறியுமே தெளிந்தார்;
கைவருமிக் கருவிகளைக் கிருஷிகருங் கருத்தாய்
காலத்தில் கனமாகக் கையாடிக் கண்டார்.
24. மழை பெய்யாக் காரணத்தால் மற்றவகை விதைப்பில்
மருங்கெங்கும் இட்டவிதை முளையாமல் மறைய,
பிழைசெய்தோ மென்றிறங்கி, பிறர்கருவி யதனல்
பிரயோஜ னம்பெற்ற வகையறிந்தார் பின்னே.
25. தருணமிது கிருஷிகரே தவருமல் பாரும்
தாரதம்மியங் கைவிதைப்புந் தருகருவி விதைப்பும்;
கருணையுடன் கவர்ண்மெண்டார் காட்டும்விதம் பயிரைக்
கங்கைகொண் டான்பல்லிக் கோட்டையிலே காண்மின்.
26. மல்லர்குளம், எட்டையன் வாழ்கின்ற புரமும்,
வரகயினர் புரம், நாரக் கிணறு, மணி யாச்சி,
நல்லகோ வில்பட்டி, நணுகாவல் நத்தம்,
நயமாகச் செய்பயிரை நாடிமகிழ் வுறுமின்.

J. DHARMARANGA RAJU.

# சமாசாரக் குறிப்புகள்

## NEWS AND NOTES

மைசூர் சமஸ்தானம் தசரா உத்ஸவத்தை ஒட்டி விவசாயக் கைத்தொழில் பொருள்காட்சி இவ்வருஷம் நடத்தப்படும். அந்த சமயத்தில் நெசவு வேலையிலும், உழவு தொழிலிலும் அனேகரைப் பரிக்ஷித்து மற்றவர்களைவிட மேன்மையாயும் சீக்கிரமாயும் இவ்வேலைகளை நடத்துகிறவர்களுக்குப் பரிசு அளிக்கப்படும். 1909-ஆ அக்டோபர்மீ 26 தேதியிலும் அதைத் தொடர்ந்து மூன்று நாட்களிலும் நெசவு வேலைப்பரிக்ஷை நடத்தப்படும். 1909-ம் ஆ அக்டோபர் மீ 25 தேதிமுதல் 30 தேதிவரை உழவுதொழில் பரிக்ஷை நடத்தப்படும். நெசவு தொழிலில் பரிசு பெறுபவர்களுக்கு ஒரு தங்கப் பதக்கமும், ரூபாயும் கொடுப்பதாகவும், உழவு தொழிலில் பரிசாக ரூபாய்கொடுப்பதாகவும் தெரியவருகிறது.

* * *

பஞ்சாப்தேசத்து விவசாய இலாகா டைரெக்டர் இந்தியா முழுவதுக்கும் ஒரு கால்நடை வைத்திய காலேஜ் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதில் கற்பிக்கப்படும் கல்வி இங்கிலாந்திலுள்ள கால்நடை வைத்தியக் கல்விச்சாலைகளில் கற்பிக்கப்படும் கல்விக்குச் சமானமாயிருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

* * *

இந்து தேசத்துக்கு அயல் நாடுகளிலிருந்து வருஷாவருஷம் ஏராளமான சர்க்கரை இறக்குமதியாகிறது. இந்த தேசத்தில் அதிகமான கரும்பு சாகுபடிசெய்து நேர்த்தியான வெள்ளைச் சர்க்கரை செய்வதற்கான ஏற்பாடுகள் நடத்தினல், அயல் நாடுகளிலிருந்து கொண்டுவரும் சர்க்கரையை அதிக விலை கொடுத்து நாம் வாங்கவேண்டியதில்லை. நமது ஜனங்களுக்கும் வேலை கிடைக்கும். நமது கிருஷிகருக்கும் சரியான இலாபம்கிடைக்கும்.

# New Books for Sale.

## மில்டெரி இந்து பாகசாஸ்திரம்.

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோபிரயாசமும் தேககஷ்டமு மெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவனாள்வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில்பெரும்பாலார் மாம்ஸபக்ஷணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்ருய் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத்தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி அரிசி, பருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம்,மல்கோவாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவ முறைகளும்,துவையல்,ஊறுகாய் வகைகளும்,பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணு 8, வி. பி. சார்ஜ் அணு 3.

## விநோதவேடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணுகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணு 6, வி. பி. சார்ஜ் அணு 3.

### ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண் பெண்முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்ட ஓர் அருமையான கதை.

கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைப்படிக்குந்தோறும் சந்தோஷக் கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறுவார்களென்பது திண்ணம். கதையின் மூலமாகவே பல அருமையான நீதிவிஷயங்களை அற்புதமாயெடுத்துக் காட்டியுள்ளது.

விலை ரூபா 1, வி. பி. சார்ஜ் அணு 4.

ஆசாரந்திரட்டு.—இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம், இந்துக்களாகிய நாம் பிரதிதினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அனுஷ்டானங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் வசனநடையி லச்சிட்டுள்ளது. விலை அணு 4, வி. பி. அணு 3.

### சுகந்த ஸ்நானப்பொடி

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்துவந்தால்வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், அழுக்குத்தேமல், உடம்பில் நமை, சொரி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேககாங்கை, மேகஊரல், கிரந்திமுதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் நிவர்த்தியாவதுமன்றி தேகத்தில் சுகந்தவாசனை கமகமவென்று வீசிக்கொண்டே ஆரோக்யமாயிருக்கும்.

டப்பி 1-க்கு அணு 4. 6-டப்பி ரூபா 1-4. 10-டப்பி ரூபா 2.

மேற்கண்டுள்ள புத்தகங்களைக் கீழ்க்கண்டவருக் கெழுதி வி. பி. மூலமாகவாவது நேராகவாவது பெற்றுக்கொள்ளலாம். தங்கள் முழுவிலாசத்தையும் தெளிவாயெழுதி இந்தபேப்பரின் பெயரையும் கண்டெழுதவும்.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாஸ்,
நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை

# "Rajambal"

கேட்ட உடன் சந்தோஷத்தையும்,

பார்த்த உடன் ஆநந்தத்தையும்,

வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்

முடித்த உடன் வியப்பையும்,

கொடுக்கும் நாவல் எது?

## "இராஜாம்பாள்"

என்னும் துப்பு அறியும் நாவல்

ஒன்றுதான்.

கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரபடங்களுடன் கூடியது.

விலை அணா 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 2. பிரத்தியேகம்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

# P. SUBBA ROY'S
## Wonderful Auyurvedic Medicines.

# பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,
# தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து

## இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்
### பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

1. "தாதுபுஷ்டி மருந்து" :—அதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறிதுவளல், பசியின்மை, கண், கால்எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல் மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு இன்னும் பற்பல மூத்திரரோகங்களைப் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி அபரிமிதனமா தாதுவிருத்தியை யுண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

2. "அக்கினிமாந்தத்திற்கு மருந்து" :—பசியின்மை, புளித்தஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும், பசிதீபனமும், தேகஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1-அல்லது 2-டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்

3. "பிரமேக நிவாரணி" :— எந்த காரணத்தினல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர குற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம்வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. செலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. "லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்" :—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாயு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2-மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேகமணிநேரம் சுகந்தவாசனை யிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டுமாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமந்தம், மலசிக்கல் 'அஜீரணத்தினலுண்டாகும் வயற்றிழவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்டநாடாது ; ஜன்னியில் கொடுக்க ஜன்னி நீரும். இதில் லாகிரிமுதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்துசாமான்களும் வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைகற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அரை குழந்தைகள் முதல்வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக் சுரம் முதலானவைகளுக்குவயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல்,

4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால்சார்ச அணா 5-ம் சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5 "சர்வநோய் சம்ஹாரன்":—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், சூதகவலி, பார்சுவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

6 "சுகந்த கூந்தல் தைலம்":— இத்தைலத்தால் தலைமயிர், மீசை, கண் இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண்நோய்களும், தலைநோய்களும் நீங்கும். செம்மட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்கு பிரகாசத்தை தரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. "நேத்திர பிந்து".—கண்ணோய், கண்குற்றல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண்இமை, புருவம் இவைகளின் வலி, க்கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும், மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகுசிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்மூடி போடவேண்டியது அவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி- செலவு 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. "கர்ணபிந்து".—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. "சர்வபடை சம்ஹாரன்":—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமைச்சலைத்தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொரிசிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள்வரையில் அணா 5-பிரத்தியேகம்.

10. "பேதிமாத்திரைகள்".—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகலவாயு, மலச்சிக்கல், அக்கினிமாந்தம், வாதம், கை கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகலசுரங்கள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1 க்கு அணா 8, வி.பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. "ஜ்வரசம்ஹாரி":—தீராத நாள்பட்ட சகலசுரங்கள், குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம், பித்தசுரம், அஸ்திசுரம், மலேரியா, மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறைசுரம், நாலாமுறைசுரம் முதலிய சகல சுரங்களை அடியோடுபோக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி, பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,
தேன்றற்காடு ஜில்லா.

# இரங்கோன்

# இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்த பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை வினுக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2 தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

# மானிட மர்மசாஸ்திரம்

## ரூபாய் 300 இனும்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

| | | அணு |
|---|---|---|
| 1. | மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன் ... ... ... ... | 6 |
| 2. | இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்) ... ... | 12 |
| 3. | ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்) | 12 |
| 4. | மாதாவின் மாகுிமை (18 படங்கள்) ... ... | 6 |
| 5. | சிசுவுற்பத்தி (34 படங்கள்) ... ... | 6 |
| 6. | கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்) ... ... | 4 |
| 7. | கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும் ... ... | 6 |
| 8. | மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்) .. | 8 |
| 9. | சிசு பரிபாலனம் (15 படங்கள்) ... ... ... | 4 |
| 10. | ஆண், பெண் மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ... | 8 |
| 11. | ஆண்மையின் அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்) | 8 |
| 12. | சமயோசித சஞ்சீவி ... ... ... ... | 2 |

தபாற் செலவு ஒரு அணு

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு தபாற்செலவு உட்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12 புஸ்தகங்களையும் ஒன்றாகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்கு தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,

"இரஞ்சித போதினி ஆபீஸ்"

11, 12 கமிஷனர் ரோட்,

இரங்கோன்.

ஜாம் நகரத்திலுள்ள ஜாம் சாஹிபினுல் அங்கீகரிக்கப்பெற்று

200-வருஷ காலமாய்ப் பிரசித்தியுடன் நடைபெறுவது

வீரிய விருத்திக்கும்

இழந்த பலத்தைத் திரும்ப அடைவதற்கும் இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்

# மதன் மஞ்சரி மாத்திரைகள்

சரீரத்தில் இருக்கப்பட்ட நரம்புகளை பலஹீனமாக கெட்ட நடவடிக்கையால் கெடுத்துக்கொள்ளுகிறோம்

மதன்மஞ்சரி :—நரம்புகளுக்கு வலிவு உண்டாக்கத்தக்கது.

" வயசு சென்றவர்களுக்கு பால்யதனத்தை உண்டாக்கச் செய்யும்.

" மனுஷர்களை எக்காலமும் பால்யமாகச் செய்யும்.

" மனுஷனுடைய இந்திரியத்திற்கு வலிவு கொடுக்கும்.

" இதைச் சாப்பிடுகிறவர்களுக்கு பிரயோஜனப்படாமல் போகாது.

" நரம்புகளுக்கும் வலிவு உண்டாகும்.

" இதைத் தவிர மேன்மையான டானிக் கிடையாது.

கை, கால்கள் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபகசக்தியை விசேஷித்துத் தரும்.

ஸ்திரீகளுக்குண்டான சகலவித ரோய்களையும் தீர்த்து சந்தோஷத்தை உண்டாக்கும். மேற்கண்ட மருந்து சாப்பிட்டால் 4-தினங்களுக்குள்ளாக அதனுடைய பயன் தெரியவரும். இந்த மருந்தை 20-நாள் விடாமல் சாப்பிட்டால், அவர்களுடைய சரீரததைப்பற்றி வேறே சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை.

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டப்பிக்கு விலை ரூபா 1. வி. பி. வேறு

## நபும்ஸகத்வாரி கிரத்

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாச தோஷத்தால் ஏற்படும் துர் அப்பியாசங்களால் உண்டாகும் நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண் தன்மை குறைவிற்கும் இதை அவ்வித ஸ்தானத்தினமேல் பூசுவதினாலேயே இன்பம் தரக்கூடிய கைகண்ட ஔஷதம்.

2 தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1—0—0,

ப்ரோப்ரைடர்,

ஆயுர்வேதோய அவுஷதாலயம்

ராஜவைத்திய

நாராயணஜீ, கேசவஜீ,

ஹெட் ஆபீஸ்—ஜாம்நகர் (கத்தியவார்)

மதராஸ் பிராஞ்சு;

No. 1-74, சைனபஜார் ரோட்,

ஸௌகார்பேட்டை,

மதராஸ்.

# சந்திரகாந்தா

ஓர் இனிய துப்பு அறியும் தமிழ் நாவல். "இராஜாம்பாள்" போலவே இருக்குமென்பதில் யாதொரு தடையுமில்லை. இந்த நாவலானது இராஜாம்பாளை எழுதிய ஜே. ஆர். ரங்கராஜா அவர்களால் எழுதப்பட்டது. இதிலும் ஆர்ட்பேப்பர் என்னும் நிகரற்ற வளவளப்பான கடிதத்தில் அச்சடித்த மூன்று சித்திரப்படங்கள் கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதுவும் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம்.

இப்போது ஆர்டர்கள் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது. அச்சிலிருந்து கூடிய ஜல்தியில் வெளியாகும்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி உடனே தங்கள் பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம்.

உயர்ந்த நான்கு தங்கப் பதக்கங்களும் முதல்தரமான

அனேக யோக்கிதா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன.

# ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

# பண்டித டி. கோபாலாசார்யர், எ. வி. எஸ்.

அவர்களால் சாஸ்திர முறைப்படி நேரில் தயார் செய்யப்பட்ட

ஆயுர்வேத அவுஷதங்கள்.




1. கேசப்பிரசாதனதைலம்.--கூந்தலை விருத்தி செய்யத்தக்கது. நல்ல சுவாஸனையுள்ள தைலம். கண்களுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கக்கூடியது. ஒரு புட்டியின் விலை ரூ. 1—0—0.

2. அசோகவடி.—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை செம்மையா யுண்டாகாதிருத்தலையும், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிக வெள்ளமாய்ப் போதலையும், வயிற்றுவலி, காலெரிவு முதலிய ஸ்திரீகளின் வியாதிகளை கண்டிப்பதில் அமிருத சஞ்சீவினிபோன்றது. புட்டி 1-க்கு விலை அணா. 12.

3. பிரமேக பஞ்ஜனி எனும் மதுமேக மூத்ரசங்கார்.—மதுமேகமென்னும் மூத்திரத்தையும், நெடுங்காலந் தொடங்கி மூத்திரமார்க்கத்திலிருந்து சாவிக்கும் சுக்ல நஷ்டம் முதலிய காரகங்களை நிவர்த்தி செய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

4. ச்யவனப்பிராஸன —உப்பஸம், க்ஷயம், சாதாரணமான இருமல், தொண்டை, ஸ்வாஸக்குழாய்களின் ஸம்பந்தமான எல்லாவிதமான துர்க்குணங்களுக்கும் அபூர்வமானது. காட்லீவர் எண்ணெயினால் குணமாகாத வியாதிகளெல்லாவற்றையும் சௌக்கியப்படுத்தும். (டின் 1-க்கு விலை ரூபா 2—8—0.)

5. ரக்தசோதக.—கெட்ட இரத்தத்தை சுத்திசெய்யும், உடம்பிலிருக்கும் சொறி, சிறங்கு, மஞ்சகாமாலை, வாதத்திலுண்டாகும் வலி இவைகளை நிவர்த்திசெய்யும். (புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0.)

போஸ்டேஜ் பாகிங் முதலிய செலவு பிரத்தியேகம்.

N. B.—இன்னும் இதரபேடெண்டு சாஸ்த்ரீக மருந்துகளும் அவைகளின் காட்லாக்குகளும் கடிதமெழுதுவோர்க்கு இனமாயனுப்பப்படும்.

டெலிக்ராம் அட்ரஸ் "பண்டிட் மதிராஸ்."

☞ ஆயுர்வேதாச்சிரமம்,

55, ஆசாரப்பன் தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை

## 'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

---

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| விவசாய விளக்கம் | ... .... ... .. | 1 | 4 | 0 |
| தென்னை | .... ... ... ... | 1 | 0 | 0 |
| கரும்பு | ... ... ... ... ... | 1 | 0 | 0 |
| நெல் | ... ... .... ... ... | 1 | 0 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,
'தென்னிந்திய விவசாயம்'
வண்ணாரப்பேட்டை, சென்னை.

---

## The South Indian Mills Co., Ltd.
## TINNEVELLY

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)
திருநெல்வேலி
மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெருமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெல் ஆகஸ்ட்டுமீ முதல் ஷெ கம்பெனியில் கிடைக்கும்.

---

## THE COMPLETE LETTER WRITER

*2nd Edition Revised and Enlarged.*

BY

**Hari Charan Das.**

**Price Re. 1.** *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter writing for all positions of Life.

It contains Chapters on :—1, Notes and general Information 2, Private Correspondence, 3, Receipt forms, 4, Bill forms. 5, Municipal Office, 6, Post Office department, 7, Postal department, 8, Income tax Office, 9. Railway Office, 10, Police Office Correspondence 11, Enquiring about a missing article on the Tram-car, 12, Medical department, 13, Collector's Office Correspondence, 14, Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15, Correspondence with Doctors, 16, Steamer Correspondence, 17, News paper Correspondence, 18, Commercial and Govt. Office Correspondence, 19, Miscellaneous Applications and forms, 20, Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

*To be had of*—**M. L. DAS CO.,**
122. *Baitakkhana Road, Calcutta.*


இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பேயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பேனி,

# காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்கார்ந்தமல்லாத (**Non Magnetic**) சர்தார் (**Sirdar**) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.

**Oxydised** ரு. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத (**Non Magnetic**) (**Lever**) லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெ. | 101. | நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு ... ... ... | 3 | 0 | 0 |
| ,, | 1. | நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு ... ... ... | 5 | 0 | 0 |
| ,, | 104. | வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங் கெடியாரம் ... ... | 12 | 8 | 0 |
| ,, | 10. | வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும்,15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம் | 16 | 0 | 0 |
| ,, | 108. | வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் ½-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது ... ... | 20 | 0 | 0 |

*N. B.*—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros., at the Guardian Press, Mount Road, Madras.